Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 21 (04-03-1992) புதன்கிழமை ஓசை: 15

## ஏப்ரல் 2ஆம் வாரத்தில் புலமைப்பரிசில் பரீட்சை

கடந்த வருடம் நடைபெறாத ஆண்டு ஐந்து மாண வர்களின் புலமைப்பரிசில் பரீட்சை ஏப்பிரல் இரண் டாவது வாரத்தில் நடைபெறும் என யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். யாழ். மாவட்டப் பாடசாலைகள் எதிர்வரும் மூன்றாம் திகதி முதலாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டதும் அதன் இரண் டாவது வாரத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகும். இப்பரீட்சை நடைபெற்றுக் கொண்டி ருக்கும் காலப்பகுதியில் வரும் (6ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றதெரிவுக்குழுவை யாழ். அனுப்ப அரசு முயற்சி

## புலிகளுடன் நேரில் பேச விருப்பம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராய்ந்துவரும் பாராளுமன்ற தெரிவுக்குழுவை யாழ்ப்பாணத்திற்கு விரைவில் அனுப்பி வைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற் கொண்டுவருவதாக நம்பகமாகத் தெரியவருகிறது. இந்தப்பாராளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகளை நேரில் சந்தித்து இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து நேரடிப் பேச்சுக்களை நடத்த விரும்புவதாகவும் தெரியவருகிறது.

இராணுவ அணுகுமுறைமூலம் விடுதலைப்புலிகள் இயக்கத்தை வெற்றிகண்டுவிட முடியாது என உணர்ந்துவரும் பிரேமதாசா அரசு புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை நடத்த விரும்புவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. புதிய தந்திரோ பாயங்களைக் கொண்ட புலிகளின் போர்முறைத்திட்டமும், அதனால் சிறிலங்கா ஆயுதப் படைகள் எதிர்கொண்ட பாரிய உயிரிழப்புகளுமே அரசாங்கத்தின் மனமாற்றத்திற்கு காரண மென இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆஸ்பத்திரியில் துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் உட்பகுதியில்வீசும் துர்நாற்றத்தினால் நோயா ளர்கள் மூக்கைப் பொத்திய வாறு செல்லவேண்டியுள்ளது.

கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக வயிற்றோட்ட நோய் விடுதி முன்பாகவும், காய வார்ட்டிற்கு முன்பாகவுமுள்ள சழிவு நீர் செல்லும் வாய்க் காலில் நீர் தேங்கி நிற்கிறது. இதனால் இப்பகுதிகளில் தொடர்ச்சியாகத் துர்நாற்றம் வீசிய வண்ணமுள்ளது. அங்கு வேலை செய்யும் ஊழியர்கள், நோயாளர்கள், பார்வையா (6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்தில் ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப் பட்டுள்ளது. அதேவேளை வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்தும் ஊரடங்கு அமு லில் இருக்கும் என கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## பூநகரிப் பகுதியில் சிறில. விமான குண்டு வீச்சு இரண்டு வீடுகள் சேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் பூந கரியிலுள்ள மட்டுவில் மேற் குப் பகுதியில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நேற்று தாக்குதல்களை மேற் கொண்டுள்ளன.

நேற்றுக்காலை 10 30 மணி யளவில் இந்த இரண்டு விமா னங்களும் குண்டு வீசித் தாக்கின இதனால் அப்பகுதி யிலுள்ள பொதுமக்களின் இரண்டு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

## மிதிவெடியில் சிக்கிய பல படையினர் காலிழப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஈச்சங்குளம் என்ற பகு தியில் உள்ள முகாமில் இருந்து முன்னேற முயன்ற இராணு வத்தினர் விடுதலைப் புலிக ளின் மிதிவெடிகளில் சிக்கிய தால்கால்களையிழந்துள்ளனர்

நேற்றுக்காலை மேற்படி முகாமிலிருந்து தவசிக்குளம் நோக்கிச் சுமார் 50 யார்வரை யில் முன்னேறிய படையினரே இவ்வாறு மிதிவெடிகளில் சிக் கிக்கொண்டதாகத் தெரியவரு கிறது.

## உலக மகளிர் தின ஓவியப் போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

உலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியால் நடாத் தப்பட்ட ஓவியப்போட்டி முடி வுகள் வெளியாகியுள்ளன. இப்போட்டியில் வெற்றிபெற் றோருக்கான பரிசில்கள் உல கப் பெண்கள் தினமான இம் மாதம் எட்டாம் திகதி இரவு 8 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் வழங் கப்படவுள்ளன. போட்டி முடி வுகள் வருமாறு:

வர்ணப்பட வேலை [மேற் பிரிவு] 1-ம் இடம் செல்வி ஜக்குலின் முத்துராஜா-யாழ்ப் பாணம், 2ஆம் இடம்; செல்வி நிர்மலா நவரட்ணம் - திருக் குடும்பக் கன்னியர்மடம் ஆங் கிலப் பாடசாலை, 3 ஆம் இடம்; செல்வி ஊர்மிலா (ஆண்டு 11 டி) இந்து மகளிர் கல்லூரி.

கறுப்பு வெள்ளை ரேகைச் சித்திரம் [மேற்பிரிவு] 1 ஆம் இடம்; திரு கே. கைலாச (6 ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை காங்கேசன் பகுதி யுத்த சூன்ய பிரதேசம்

### இரு தினங்களில் துறைமுகம் திறப்பு

கீரிமலை காங்கேசன்துறை வீதியை அண்மித்த பகுதியை யுத்த சூன்ய பிரதேசமாக கொள்வதென விடுதலைப்புலி களும் சிறிலங்கா இராணுவ மும் இணங்கியுள்ளன. காங் கேசன் துறைமுகத்திலிருந்து கீரிமலை சேந்தாங்குளம் வீதி யூடாக உணவு வாகனங்களை அனுமதிப்பதற்கு வசதியா கவே இந்த உடன்பாடு ஏற் பட்டுள்ளது.

இதேவேளை கீரிமலை-சேந் தான் குளம் வீதியில் புதைக் கப்பட்டிருந்த கண்ணி வெடி அகற்றும் வேலைகள் இடம் பெற்று வருகின்றன. இவ் வேலைகள், நாளைக்குள் முடி வடையும் எனத் தெரிவிக்கப் படுகின்றது. திட்டமிட்டபடி இவ் வேலைகள் பூர்த்தியடை யும் கட்டத்தில் வெள்ளிக் கிழமை அன்று முதல் தொகுதி லொறிகள் உணவுப் பொருள் களை எடுத்துவர காங்கேசன் துறை துறைமுகம் செல்லும் எனவும் தெரியவருகின்றது.

## வவுனியா கிராமங்கள் மீது அகோரக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள காக்கையன் குளம், ஈச்சங் குளம் ஆகிய பொதுமக் கள் வாழும் பகுதிகள் மீது சிறிலங்கா விமானப்படையி னர் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ள னர்.

நேற்றுக்காலை முதல் மாலை வரை மேற்படி பகுதி கள் மீது வான்தாக்குதல்கள் நடாத்தப் பட்டுள்ளது. இத் தாக்குதல்களால் பலர் காய மடைந்துள்ளதுடன் பொது மக்களின் பல குடியிருப்புக்கள் சேதமடைந்திருக்கின்றன

உலகநாதன் (வயது 27) லங்கன் (வயது 25) ஆகியோர் உட்பட பல பொதுமக்கள் இத்தாக்குதலில் காயமடைந் திருக்கின்றனர். அத்துடன் காக்கையன் குளப்பகுதியில் நேற்று நண்பகல் நடத்தப் பட்ட விமானத்தாக்குதலில் பல வீடுகள் முற்றாக அழிக் கப்பட்டிருக்கின்றன.

அதேவேளை இராணுவ முகாமில் இருந்து மேற்படி பகுதிகளை நோக்கி எறி கணைத் தாக்குதல்களும் நடத்தப்பட்டு வருகிறது.

## கிழக்கில்புலிகளின் அதிரடிகள்; இராணுவ தரப்பில் அச்சம்

(கொழும்பு)

கிழக்கில் கடந்த இரண்டு மாதங்களாக விடுதலைப் புலி களின் அதிரடித் தாக்குதல்க ளுக்கு நூற்றுக்கும் அதிகமான படையினர் பலியாகியுள்ள னர். இந்த நிலையில் ஏனைய பகுதிகளில் இராணுவத் தாக் குதல்கள் கடுமையாக மேற் கொள்ளப்படாவிட்டால் கிழக்கில் இராணுவத்தினரை புலிகள் சின்ன பின்னமாக்கி விடுவார்களோ என்ற பீதி இராணுவ வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கிறது என பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

வவுனியாவில் 3000 இற்கு மேற்பட்ட தரைப்படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டனர் அவர்களுக்கு உதவியாக கவச வாகனங்கள், டாங்கிகள், விமானப்படைகள்என பெரும் பணச்செலவில் இந்த படை எடுப்பு மேற்கொள்ளப்பட் டது. இருந்தும் சிறிலங்கா இராணுவத்தினரால் சொல் (6 ஆம் பக்கப் பார்க்க)

## வரி விளம்பரம்

**ENGLISH GRAMMAR SPOKEN ENGLISH**
3மாத ஆங்கிலப் பயிற்சி புதிய பிரிவு 06. 03. 92 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. V. N. Kandasamy A.I. B.Part I (London) Inter (London) 87, திருநெல்வேலி றோட், கொக்குவில். (2257)

### உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

உரும்பராய் ஒஸ்கா விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் 7பேர்கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கோண்டாவில் குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற உள்ளது. (2259)

### இந்துசமய பேரவை நிதியம் ஆரம்பிக்கிறது

வறியோர், அநாதைகள், விதவைகள், இடம் பெயர்ந்தோருக்கு உதவுவதற்காக இந்து சமய பேரவை நிதியம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட இருக்கும் இந்து சமய சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு கோவில்கள், பொது மக்கள் மற்றும் பொது அமைப்புகளிடம் இருந்து அன்பளிப்புகளை எதிர்பார்க்கப் படுகிறது.

நிதியத்தைப் பரிபாலிக்க இந்து சமயப் பேரவைத் தலைவர், செயலாளர், பொருளாளர்களுடன் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவதர்மவள்ளல் க.கனகராஜா, கலாநிதி சி.க.சிற்றம்பலம், ஈ. சரவணபவன் ஆகியோரைக் கொண்ட பணிப்பாளர் சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (21)

### மலரவனுக்கு மக்கள் அஞ்சலி

கடந்த ஞாயிற்றுக் கிழமை (01- 03- 92) அல்லாரை தெற்கில் உள்ள குளம் ஒன்றில் குளித்துக்கொண்டு இருந்த சமயம் நீரில் மூழ்கி மரணத்தை தழுவிக்கொண்ட வீரவேங்கை மலரவன் (வேலாயுதபிள்ளை ஜெயக்குமார் அல்லாரை தெற்கு) என்பவரின் புகழுடல் நேற்று முன்தினம் அல்லாரை பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இம் மாவீரரின் புகழுடலுக்கு பெரும் திரளான மக்கள் மலர் தூவி அஞ்சலியைச் செலுத்தினர். இதன் பின்பு வி. பு. ம. முன்னணியினரின் அஞ்சலியுரையுடன் கொடிகாமம் மாவீரர்துயிலும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

# குடாநாட்டில் நீரைத் தேக்க பெருந்திட்டம் தயாரிப்பு

## -தமிழீழ ஆய்வு நிறுவனம்

(நமது நிருபர்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தேச நிர்மாணிகள் பிரிவின் அனுசரணையுடன் யாழ். குடா நாட்டு நீர் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக பெருந் திட்டம் ஒன்றை யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் தலைமையிலான குழு தயாரித்து வருகிறது என தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் செய்தித் தொடர்பு வெளியீட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புவியியல் அமைப்பு, நீரின் பாவனை நன்னீரைத் தேக்குதல், உவர் நீர்த்தடுப்பு ஆகிய சகல அம்சங்களும் ஆராயப்பட்டு இப்பெருந் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் சரித்திர ஆவணமாகப் பாதுகாப்பதற்காக, நல்லூரிலுள்ள சங்கிலியன் தோப்பு அளவு எடுக்கப்பட்டு வரைபடங்கள் தயாரிக்கும் முயற்சியில் தேச நிர்மாணிகளின் பொறியியல் மதியுரையகம் செயற்பட்டு வருகின்றது

மேலும் நிலக் கடலையிலிருந்து கடலை எண்ணெய் உற்பத்தி செய்வதில் பரீட்சார்த்த முயற்சிகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது என்றும் அந்தச் செய்திக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது.

## மீசாலையில் கடையுடைத்து திருட்டு

(நமது நிருபர்)

மீசாலைப் பகுதியில் நள்ளிரவுவேளையில்கடைஉடைத்து பதினையாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. கடந்த ஞாயிற்றுக் கிழமைஇரவு நடைபெற்ற மேற்படி திருட்டுச் சம்பவம் பற்றி கடையின் உரிமையாளர் சாவகச்சேரி காவல்துறைப் பணிமனையில் புகார் செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து காவல்துறையினர் இதில் சம்பந்தப் பட்டோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

[ச,க]

### மூன்று வருடம் பதவி வகித்த

## பதில் அதிபர்களுக்கு நிரந்தர அதிபர் நியமனம்

31-12-1990 இல் பதில் அதிபர்களாக மூன்று வருட சேவையை முடித்தவர்களை நிரந்தரமாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மத்திய கல்வி அமைச்சு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு அறிவித்துள்ளது.

இவ்வாறு நிரந்தரமாக்கப் படும்போது அவர்களின் பாடசாலையின் தரத்திற்கேற்ப அதிபர் தரமும் நிர்ணயிக்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள தாகச் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

31-12- 1989 வரையில் மூன்று வருடம் பதில் கடமை புரிந்த அதிபர்கள் நிரந்தரமாக்கப்பட்ட பெயர் பட்டியல் வெளிவந்துள்ளது. தகைமையிலிருந்தும் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் இ.த.ஆ சங்கத்துடன் தொடர்புகொள்ளும் படி கேட்கப் படுகின்றார்கள்.

## கடவுச்சீட்டு அனுப்புவதை தடுக்க விரைவில் சட்டம்

குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுப் பிரயாண ஆவணமொன்றை வைத்திருப்பவர் அதை இன்னொருவருக்கு அனுப்புவது விரைவில் தடை செய்யப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கென குடிவரவு, குடியகல்வு சட்டத் திருத்தமொன்று நிதியமைச்சர் டி. பி. விஜயதுங்காவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத் திருத்தத்தின் படி பிரயாண ஆவணமொன்றை (கடவுச்சீட்டு) வைத்திருக்கின்றவரும் வெளிநாட்டில் வசிக்கின்ற வருமான ஒருவர் குடி வருகை, குடியகல்வோர் கட்டுப்பாட்டாளரின் அனுமதியின்றி அத்தகைய ஆவணத்தை தபால் மூலமோ அல்லது வேறோர் ஆள் மூலமோ இலங்கையில் வசிக்கும் ஒருவருக்கு அனுப்புவது தடைசெய்யப்படும்.

இதேபோல் இலங்கையில் வசிக்கின்றவர் வெளிநாட்டில் வசிக்கின்ற ஒருவருக்கு அத்தகைய ஆவணங்களை அனுப்புவதும் தடையாகும். மற்றும் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பிரயாண கடவுச் சீட்டுக்களை, அவசர சான்றிதழ்களை வைத்திருக்கவும் முடியாது.

ஓர் ஆவணத்தை வைத்துக் கொண்டு இன்னுமொரு ஆவணம் பெற விண்ணப்பிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

### கலைச்செல்வன் ஞாபகார்த்த

## உதைபந்தாட்டப் போட்டி

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் மாவீரர் கலைச்செல்வன் ஞாபகார்த்த ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாதம்ஒன்பதாம் திகதி ஆரம்பமாக உள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இம்மாதம் ஏழாம்திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

தென்மராட்சி கிழக்கு
தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம்,

பச்சிலைப் பள்ளி தெங்கு பனம்பொருள்
கூட்டுறவுச் சங்கம், பளை

ஆகிய இரு சங்கங்களுக்குமான

## பதவி வெற்றிடம்

அங்கத்துவ தொடர்புப் பயிற்சி
உத்தியோகத்தர்

- கல்வி உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சை 11-03-92 புதன் காலை பத்து மணிக்கு கச்சாய் வீதியிலுள்ள கொடிகாமம் தெ. ப. பொ. கூ. சங்கக் காரியாலயத்தில் நடைபெற உள்ளதால், கீழ் வரும் தகுதியுடையோர் மூலச்சான்றிதழுடன் நேரடியாகச் சமுகம் கொடுக்கவும்.

தகுதிகள்:

வயது: 28 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டோர்.

கல்வித் தகைமை:

1. 11 ஆவது அடிப்படைச் சம்பளப் பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், 12 ஆவது சம்பள அடிப்படைச் சம்பளப் பதவியில் 4 வருடத்திற்கான அனுபவமும், அங்கத்துவ தொடர்பு பயிற்சியில் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் தரர்தரம் (உயர்தரம்) அல்லது க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி.
3. இரு நற்சான்றிதழ்.
4. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
.5 அனுபவச் சான்றிதழ்.

பொது முகாமையாளர்
தென்மராட்சி / பச்சிலைப்பள்ளி
தெ. ப. பொ. கூ. சங்கங்களின் கொத்தணி,
கொடிகாமம்.

(சி/3997)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவனாகவும், உதவி ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் இருந்து 1991 மே மாதத்தில் ஓய்வு பெற்ற திரு. கைலாசபிள்ளை - கந்தசாமி அவர்கள் 02-03-1992 இல் கொழும்பில் சிவபதமடைந்துள்ளார். அவரின் அளப்பரும் சேவையை நன்றியறிதலுடன் நினைவு கூருவதோடு, அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்திக் கொள்கின்றோம்.

அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், மாணவர்கள்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. (2258)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

**மருத்துவபீடம்**
**இறுதியாண்டு மருத்துவபீட**
**(மீள்)பரீட்சை-1992**

மூன்றாம் ஆண்டு
மருத்துவ பீட
(பகுதி 1)

**மீள் பரீட்சை -1992**

மேற்கூறப்பட்ட பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

இறுதியாண்டு (மீள் பரீட்சை) -23-03-92
மூன்றாம்ஆண்டு(பகுதி-1) (மீள் பரீட்சை) 24-03-92

(சி/3996) பதிவாளர்

## நினைவு கூருகின்றோம்

**1992-03-04**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு கிண்ணியடித் துறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். ரமணி** [கிருஷ்ணபிள்ளை கணேசானந்தம் - சந்திவெளி, மட்டக்களப்பு]

திருக்கோணமலையில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டும் காணாமலும் போன 3 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு நாயாறில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். மணியம்** [கந்தையா மணிவண்ணன்- நவாலி]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3995)

# "அணுவாயுதத் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாது"

## -பி. வி. நரசிம்மராவ் வலியுறுத்து

(டில்லி)

அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடப் போவதில்லை என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த உடன்படிக்கை பாரபட்சமானது என்றும், அணு ஆயுதக் குறைப்புக்கு இது உதவாது என்றும் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் அவர் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

இஸ்லாமிய அடிப்படைவாதக் குழு உருவெடுத்து வருவது பற்றிய கேள்விக்கு பதிலளிக்கும் போது சர்வதேச சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்கும் இத்தகைய தீவிர சமய அடிப்படைவாதம் ஏற்றதல்ல என்று சமய சார்பற்ற நாடு என்ற வகையில் இந்தியா கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### ஐ. நா. பாதுகாப்புச்சபை தீர்மானம்

## ஈராக்கை நாசப்படுத்த மேற்கொள்ளப்படும் சதி

(பக்தாத்)

ஈராக்கின் ஆயுத முறையை அழிப்பது என்று ஐ. நா. பாதுகாப்புச்சபை அண்மையில் மேற்கொண்ட தீர்மானம் தமது நாட்டின் தொழில் துறையை நாசப்படுத்துவது என்ற இரகசியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று ஈராக் கூறியுள்ளது.

நேற்று முன்தினம் பக்தாத்தில் செய்தியாளர்களிடையே பேசிய ஈராக்கின் துணைப் பிரதமர் தாரிக் அசீஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ஐ நா. விற்கு வழங்கப்பட்ட அனைத்து உறுதிமொழிகளையும் ஈராக் நிறைவேற்றி வருகிறது என்றும் இப்போது ஈராக்கிற்கு எதிரான வர்த்தகத் தடை அகற்றப்படல் வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

## மத். அரசின் கொள்கை மக்கள் விரோதமானது

### சி.பி.ஐ.கண்டனம்

(டில்லி)

மத்திய அரசின் கொள்கைகள் மக்களுக்கு எதிராகவும், தேசிய நலன்களுக்கு எதிராகவும் இருப்பதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் ஆக்ரா பகுதியில் கட்சியின் உத்திரப் பிரதேச மாநில மாநாட்டில் கட்சியின் செயலாளர் ஏ.எம். பர்தான் மேலும் பேசுகையில், பெரும் எடுப்பிலான ஏழை மக்களுக்கு இந்தக் கொள்கைகள் ஒருபோதும் உதவாது என்று கூறினார்.

## ஹொனேக்கர்மீது விசாரணை

முன்னாள் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் எரிக் ஹொனேக்கர் நீதி விசாரணைக்காக ஜேர்மனிக்கு திரும்ப வேண்டும் என்று கோரப்படுவதை அந்நாட்டின் பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை.

தற்போது மொஸ்கோவிலுள்ள சில நாட்டுத் தூதுவரகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஹொனேக்கரின் உடல் நிலை மோசமடைந்து வருவதாக வெளியான அறிக்கைக்குப் பின் பெரும்பாலான மக்களின் மனோநிலை மாறியிருப்பதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

ஆனால் கிழக்கு ஜேர்மன் மக்களில் பாதிப்பேர் மேற்கு நாட்டுக்கு தப்பிச்செல்லமுயன்றவர்களை சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்ட ஹொனேக்கர் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனக் கூறியுள்ளனராம்.

## யூக். மேலும் ஒரு மாநிலம் சுதந்திர பிரகடனம்

(பெல்கிரேட்)

பொஸ்னியா மாநிலம் யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்து தனிநாடாக பிரகடனம் செய்ய தீர்மானித்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பில் 58 சதவீத பொஸ்னியா மக்கள் தனி நாடுகோரி வாக்களித்தனர்.

பொஸ்னியாவின் வெளிவிவகார அமைச்சர் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பில் பெற்ற வெற்றியை பிரகடனம் செய்து உரையாற்றுகையில் பொஸ்னியாவை தன்னாதிக்கம் கொண்ட தனி நாடாக பிரகடனம் செய்ய இது போதுமானது என தெரிவித்தார்.

யூகோஸ்லாவியாவிலிருந்து பொஸ்னியா பிரிவதை சேர்பியர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இதனால் அங்கு யுத்தமொன்று நிகழக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

### மத்திய கிழக்கு சமாதான மாநாடு

## நான்காவது கட்ட பேச்சு வாஷிங்டனில் ஆரம்பம்

(வாஷிங்டன்)

இஸ்ரேலிய - அரபுப் பிரதிநிதிகள் தமது நான்காவது கட்ட தரப்பு பேச்சுவார்த்தைகளை நேற்று முன்தினம் வாஷிங்டனில் ஆரம்பித்தனர். மூன்றுநாள் இடைவெளிக்குப் பிறகு பேச்சு வார்த்தைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இஸ்ரேல், ஜோர்தான், சிரியா மற்றும் லெபனான் பிரதிநிதிகள் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தில் கூடிப் பேசினர் கடந்த வாரம் பேச்சுவார்த்தைகளின் போது இஸ்ரேலிய - அரபுப் பிரதிநிதிகளுக்கிடையில் கெடுபிடி நிலை நிலவியதால் எந்தவித முன்னேற்றமும் பேச்சுவார்த்தைகளில் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

### பல்லாயிரக் கணக்கில்

## குர்திஷ் மக்கள் படுகொலை ஈராக் மீது கண்டனம்

(நியூயோர்க்)

பல ஆயிரக்கணக்கான குர்திஷ் மக்களை ஈராக் பயங்கரமான முறையில் படுகொலை செய்திருப்பதாக இரண்டு மனித உரிமைக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

பல சடலங்களில் குண்டு துளைத்த அடையாளங்கள் இருந்ததாகவும் மனிதாபிமானத்துக்கு விரோதமாக இப் பயங்கர படுகொலைகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அக்குழு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நிலைமை தொடர்பான மனித உரிமைகள் அறிக்கையொன்று எரிக்ஸ்டோவரால் வெளியிடப்பட்டுள்ளது.

வட ஈராக்கிற்கு கடந்த டிசம்பரில் 7 நாள் விஜயமொன்றை தாம் மேற்கொண்டதாகவும் இந்த விஜயத்தின் மூலம் தமக்கு பல தகவல்கள் கிடைத்ததாகவும் அவர் கூறினார்.

ஈராக் தஸ்தாவேஜுக்கள் மற்றும் ஈராக் சார்பானவர்களின் சாட்சியங்கள் என்பன பல ஆயிரக்கணக்கான குர்திஷ்கள் பயங்கரமாகப் படுகொலை செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதாகவும் புதைகுழிகள் பலவும் நிபுணர்களுடன் தோண்டப்பட்டு பரிசோதனைகள் நடத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பிராந்தியத்தின் ஏனைய பகுதிகளும் பரிசீலனைக்கு எடுக்கபபட்டால் ஏதோ ஒரு பயங்கரம் நடந்திருப்பது தெளிவாகும். எமது விசாரணைகளை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மத்திய கிழக்கு கண்காணிப்பு பிரிவு இயக்குனர் அர்யெநெயார் கருத்து வெளியிடுகையில் தமது விசாரணை விபரங்களை ஐ நா. விசேட அதிகாரி மக்ஸ் வன்டர்ஸ்டோவிடம் கையளிக்கப்பட்டு விட்டதாகவும் கூறினார்.

ஈராக் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு சம்பந்தமான பூர்வாங்க அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார்

### பொருளாதார சீரமைப்பு:

## கட்டளை எதையும் உலக வங்கி இடவில்லை

(டில்லி)

உலக வங்கியின் கட்டளையின் பேரில் இந்தியாவில் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுவதை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மறுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இப்போதைய வெளிச் செலாவணித் தட்டுப்பாட்டை சமாளிப்பதும், இந்தியத் தொழிற்சாலைகளைப் படிப்படியாக போட்டியிடக் கூடிய நிலைக்கு கொண்டு வருவதும் இந்த சீர்திருத்தங்களின் நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

கலப்புப் பொருளாதாரம் அரசுத் துறையின் பணி என்றும் சிறுதொழிற்றுறை உட்பட கதர் கிராமத் தொழில் வளர்ச்சி, சமூகத்தின் ஏழை எளியோரின் முன்னேற்றம் ஆகிய நோக்கங்களை அரசு நிறைவேற்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

## யேமன் யூதர்களை மீட்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது

### -லண்டன் ரைம்ஸ்

(லண்டன்)

யேமனிலிருந்து நூற்றுக் கணக்கான யூதர்களை வெளியேற்ற இஸ்ரேல் அங்கு திடீர் முற்றுகையொன்றை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக லண்டனில் சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

யேமனில் தற்சமயம் 1500 யூதர்கள் உள்ளனர். இவர்களை வெளியேற்ற 1984 ஆம் ஆண்டில் எதியோப்பியாவிலிருந்து ஆயிரக்கணக்கான யூதர்களை வெளியேற்ற எடுத்த அதே பாணியிலான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாகவும், செங்கடலுக்கு கீழேயுள்ள பாதையொன்றைப் பயன்படுத்தி இஸ்ரேல் யுத்த விமானங்கள் இந்நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும், எதிர்வரும் ஜூன் மாதத்தில் இஸ்ரேலில்பொதுத் தேர்தல் நடப்பதற்கு முன்பாக இத்திட்டம் நிறைவேற்றப்படக் கூடும் எனவும் மேலும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

## தங்கத்தின் விலை சரிவு

(டில்லி)

இந்தியாவில் தங்கத்தின் விலைகள் பெருமளவிற்குக் குறைந்துள்ளதாக இந்திய பொருளாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளிநாடுகளில் இருந்து வரும் இந்தியர்கள் ஐந்து கிலோ கிராம் தங்கத்தை தங்களுடன் கொண்டு வருவதற்கு வரவு செலவுத் திட்ட யோசனைகளில் வழி செய்யப்பட்டிருப்பதை அடுத்தே இந்த விலைச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

## 'அபிவிருத்தி துரிதப்படுத்த பொரு. சீர்திருத்தங்கள்'

### - சீனப்பிரதமர் கோரிக்கை

(பீகிங்)

அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காகபொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ளப் போவதாக சீனப் பிரதமர் லீ-பெங் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய லீபெங் இக் கோரிக்கையை முன் வைத்தார். பரீட்சார்த்த ரீதியில் சீன அரசாங்கம் துணிச்சலான சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும்,

சீனா தனது பொருளாதார சீர் திருத்த நடவடிக்கைகளின் வேகத்தை விரிவுபடுத்த வேண்டுமென்றும்.

வளர்ச்சிப் பணிகளைப் பெருக்குவதான முயற்சிகளுக்கு தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

### இந்திய - அமெரிக்க உறவு குறித்து

## அமெரிக்காவுடன் பேச்சு; டிக்ஷிற்வாஷிங்டன் பயணம்

(டில்லி)

இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே.என். டிக்ஷிற் எதிர்வரும் எட்டாம் திகதியன்று புதுடில்லியிலிருந்து வாஷிங்டனுக்குப் பயணமாகவுள்ளார். இந்தியாவுடனான அமெரிக்க வர்த்தக உறவுகள் மற்றும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு உட்பட இருதரப்பு விடயங்கள் பற்றியும் டிக்ஷிற் அமெரிக்க அரசத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

கடந்த மாதத்தில் பாகிஸ்தானின் வெளியுறவுச் செயலர் அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டதும், பாகிஸ்தான் அணு ஆயுதவசதி பெற்றிருப்பதை அவர் ஏற்றுக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கருத்துக் கணிப்பில் புஷ் தோல்வி

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் சவுத் டாகோடா பகுதியில் நடைபெற்றகணிப்பு ஒன்றில் படுதோல்வியைச் சந்தித்துள்ளார். அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான பூர்வாங்க கணிப்பு ஒன்று இப்பகுதியில் நடத்தப்பட்டபோது புஷ் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பொப் கெரீரி என்பவரிடம் தோல்வி கண்டார்.

# தியாகச் சுடர் அன்னை பூபதி

தியாகம் என்னும் புனித நாவலின் இலக்கியக் கதா நாயகியே அன்னைபூபதி. சுதிரையிலிருந்து கட்டளை பிறப்பிப்பதன்மூலமோ மேடையில் நின்று உரத்த குரலில் விடுதலை பற்றிக் கர்ச்சிப்பதன் மூலமோ மட்டும் ஓரினத்தின் விடுதலையைப் பெற்றெடுக்க முடியாது. அதற்காக உயிரையும் கொடுத்துப் போராட வேண்டுமென்பதையேஅன்னை பூபதியின் வாழ்க்கை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

அன்னை அவர்கள் ஈழத் தமிழ் இனத்தின் எதிர்காலம் பிரகாசமான வாழ்க்கைக்காகத் தன்னை மறந்து, தன் குலக்கொழுந்துகளை மறந்து, சுற்றமுற்றஞ் சூழலும் மறந்து தனது வாழ்க்கையை தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்காக முழுமையாக அர்ப்பணஞ் செய்தார். கடந்த அரை நூற்றாண்டு கால தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதும் வரலாற்று ஆசிரியர்கள், அன்னை பூபதியின் மனோ திடம்நிறைந்த தியாகத்திற்கு ஒரு தனிஅத்தியாயம் படைக்க வேண்டியவர்களாவர். அவர் தனது பங்களிப்பைச் செய்துள்ளார்.

வாள் கொண்டு குதிரை மீதிருந்து போர் புரிந்த பிரான்சு நாட்டு ஜோன் ஒப் ஆர்க், விடுதலைப் போர்களில் பெண்கள் புரிந்த பங்களிப்பும் மகத்தானது என்பதை உலகறியச் செய்தார். இதே போன்று எமது தாயக விடுதலைப் போராட்டத்திலும் இன்று பல்லாயிரம் பெண் புலிகள் ஆயுதமேந்தி களத்தில் இறங்கியுள்ளனர். இந்த வகையில் ஐம்பத்தெட்டு வயதான அன்னை பூபதி தன்னுடைய பங்களிப்பாக எமது நியாயமான உரிமைப் போராட்டத்தைஉலகறியச் செய்வதற்காக தன்னையே அர்ப்பணஞ் செய்தார்.

## இளமைப் பருவம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான், இது ஒரு பழம் பெரும் தமிழ்க் கிராமம் மருதமும் நெய்தலும் நிறைந்த பேரூர் வீர மறவர்கள் வாழும் பூமி

விவசாயிகளை அதிகளவில் கொண்ட இக்கிராமத்தில் மத்திய தர வர்க்கத் தட்டிலுள்ள குடும்பம் ஒன்றில் 1932 கார்த்திகை3இல்பிறந்தார்.பூபதியின் தந்தை அன்னமுத்துவும் தாய் பெரியபிள்ளையும் கடும் உழைப்பாளிகள். அன்னைபூபதியுடன் உடன் பிறந்தோர் நால்வர். இரு சகோதரர்கள். இரு சகோதரிகள். தாய், தந்தையர் வயலில் முதுகொடிய உழைக்கும் உழைப்பின் அருமை பிள்ளைகளுக்கும் தெரியும்:

பூபதியவர்கள் பாடசாலை சென்று எழுதவும், வாசிக்கவும் கற்றுக் கொண்டாலும் தனது பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

## திருமணம்

இளம் விவசாயி முத்துலிங்கம் பூபதியம்மாவின் உறவினர்: ஈராறு வயதில் அன்னை பூபதி முத்துலிங்கத்தை திருமணம் புரிந்தார்... அன்பார்ந்த கணவன், இனிய இல்லற வாழ்க்கை. பூபதி இரு புதல்வர்களுக்குத் தாயானார். அன்னை பூபதியின் கணவன் திடீரென நோய் வாய்ப்பட்டார். முத்துலிங்கம் மீளாத்துயிலில் உறங்க அன்னை பூபதி கணவனை



இழந்த கைம்பெண்ணானார்.

## மறுமணம்

வாழ்க்கை என்பது வரட்டு வேதாந்தமல்ல. அன்பும், பண்பும் நிரம்பிய அன்னை பூபதியிடம் மூடச் சம்பிரதாயங்களை சாம்பல் மேடாக்கி அதன் மீது பெண்கள் விடுதலைக்கான பாதையை அமைக்கும் மனோதிடம் இரத்தத்தோடு இரண்டறக் கலந்திருந்தது: அன்னார் மறுமணம் புரிய திடசங்கற்ப்பம் பூண்டார்.

1962 ஆம் ஆண்டு தன்னுடைய 30-வது வயதில் புகையிரத நிலைய கங்காணியாக தொழில் புரிந்த, மனைவியை இழந்த கணபதிப்பிள்ளை என்பவரை திருமணம் செய்தார். கணபதிப்பிள்ளைக்கு ஏற்கனவே இருபுத்திரர்களும் இரு புத்திரிகளும் இருந்தனர்.

பூபதி - கணபதிப்பிள்ளை தம்பதிகளின் வாழ்க்கைப் படகு அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. இத்தம்பதிகள் இரு ஆண், இரு பெண் குழந்தைகளுக்குப் பெற்றோர் ஆனார்கள் இந்நேரத்தில் தன் குடும்பத்தின் நலன்களில் மாத்திரம் அக்கறை காட்டாது சமூகத்தில் வாழும் அபலைகளின், அநாதைகளின் வாழ்விலும் அக்கறை கொண்டார் அன்னை பூபதி. மாதர் சங்கத்தில் இணைந்து சமூக சேவைகளிலும் ஈடுபடத் தொடங்கினார்.

## வாழ்வில் புயல்

அமைதியாக ஓடிக் கொண்டிருந்த அன்னை பூபதியின் வாழ்க்கைப்படகு தள்ளாடத் தொடங்கியது. இனிமையான வாழ்க்கையில் மீண்டும் புயல் வீசத் தொடங்கியது.

சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித்தனங்கள் வடகிழக்கு முழுவதும் கோலோச்சிய காலம்அதுகாலத்துக்குக்காலம் பீரங்கி வாகனங்கள், உலங்கு வானூர்திகள்(ஹெலிகாப்டர்) துணைகொண்டு படைகளை நடத்தி தமிழர்களைக் கொன்று குவித்தனர். இளைஞர்களையும் யுவதிகளையும் காரணமின்றியே கைதுசெய்து கயிற்றில் தலை கீழாகத் தொங்கவிட்டும், அடித்தும், உதைத்தும், நகங்களைப்பிடுங்கியும், எஸ்லோன் பைப்புகளால்நொருக்கியும் விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்துகொண்டிருந்த காலகட்டத்தில் ...

தமிழர் மீது சிறிலங்கா இனவாத அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாதப் பூதத்திற்குப் பலியானான் முத்துலிங்கம்- பூபதி தம்பதிகளின் 2வது மகன். தனது 28 ஆவதுவயதில்சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு துடிதுடித்து மாண்டான்.

மகனின் மரணச் செய்தி அன்னை பூபதியின் நெஞ்சத்தை உலுக்கியது. தாளாத துயரத்தில் தவித்தார்.

இத்துயரம் ஆறுமுன்பே அடுத்த பேரிடி மூத்த மகன் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டார். 'பூலோகத்திற்கு நரகக்கிடங்கு' என வர்ணிக்கப்படும் பூசா முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு நான்கு ஆண்டுகளாக பட்ட வேதனை எதிர்கால வரலாற்றில் அழிக்க முடியாதது அவரும் அவரது தமிழ்ச் சகாக்களும் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர்

நான்கு வருடங்களாக சிறையில் துடிக்கும் மகனின் நினைவும் அநியாயமாக மாண்டு போன மகனின் நினைவும் அன்னை பூபதியை அலைக்கழித்தன.

சிங்கள இனவெறி கூர்மை அடைந்தது. அப்பாவிகள் அநியாயமாகச் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர் கோயில்கள். தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. கடைகள், வீடுகள், பாடசாலைகள் எரிக்கப்பட்டன.

துயரத்தின்விளிம்பில் நின்ற அன்னை பூபதியின் நெஞ்சம் இந் நிகழ்ச்சிகளால் உறுதியடையத் தொடங்கியது. இத்தகைய இழப்புகள் தன்னுடைய குடும்பத்திற்கு மட்டுமே உரியதல்ல. முழுத் தமிழ் இனமுமே இன அழிபபிற்குட்படும் போது தன் குடும்பத்தை மட்டுமே எண்ணிச் சோருவது மடைமை. எம்இனத்தின் விடிவிற்காக போராட வேண்டும் என்று நெஞ்சுரமடைந்தார் அன்னை பூபதி. ஏற்கனவே சமூக நலனில் அக்கறை கொண்டு உழைத்து வந்த அன்னை பூபதியின் சமூக ஈடுபாடு மேலும் அதிகரித்தது.

மக்களைப் பறிகொடுத்ததோடு அன்னை பூபதி அவர்களின் மனவேதனை முடிந்திருந்தாற் கூட அவர் ஓரளவு ஆறுதலடைந்திருப்பார். சூறாவளியால் சீறியெழுந்தகவலையென்னும் கொடிய அலை அன்னையின் குடும்பத்தை மீண்டும் துயரக் கடலுக்குள் அமிழ்த்தியது. கணபதிப்பிள்ளை அன்னை பூபதி தம்பதிகளின் மூத்த மகனை அவனது 23ஆவது வயதில் சிறிலங்கா இராணுவம் சுட்டுக் கொன்றது. பூபதியின் வயிற்றில் தீச்சுவாலை படர்ந்து உயர்ந்து எழுந்தது.

இவ்வளவு வேதனைகளையும் தாங்கிக் கொண்ட பூபதியம்மா குடும்பம் தொடர்ந்தும் கிரானில் வாழ முடியாத நிலை தோன்றியது.

மீன்பாடும் தேனாடாகிய மட்டக்களப்பில், கிரான் என்னும் சோலை வளம் நிரம்பிய கிராமத்தில் வாழ்க்கைப் படகோட்டிய அன்னையவர்கள் சிறிலங்கா இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் அதிகரிக்க அதிகரிக்க கிரானில் தொடர்ந்து வசிக்க முடியாத நிலையேற்பட்டது. இந்நிலையில் மட்டக்களப்பை அடுத்துள்ள நாவற்கேணியில் குடும்பத்தோடு சென்று வசிக்கத் தொடங்கினார்.

தமிழீழப் போராட்டம் உத்வேகமடைய, விடுதலைப் போர்க்களத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் வீரச்சாவடைந்த வேளை அன்னை பூபதியின் சமூகப்பணிகள் போராட்டத்திற்குஉத்வேகமளிக்கும் வகையில் அமைந்தன.

சிறிலங்கா இராணுவத்தினதும், சிங்கள ஊர்காவற்படையினதும் அத்துமீறிய செயல்களை நிறுத்துமாறு சிறிலங்கா இராணுவ முகாம்களுக்குச் சென்று மகஜர் கொடுத்து வற்புறுத்திய பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவில் ஒருவராக அன்னை பூபதியும் இருந்தார். தமிழர்களின் மீதானஇன அழிப்புகளை நிறுத்துமாறுகோரிபொது அமைப்புகள் பல தடவைகள் சிறிலங்கா இராணுவ முகாம் நோக்கிப் பேரணி வகுத்துச் சென்றன. ஒவ்வொரு பேரணியிலும் அன்னை பூபதி ஆர்வத்தோடு பங்கு கொண்டார். அப்பாவி மக்களுக்கெதிரான தாக்குதல்களை நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை மனு கொண்டு சென்ற குழுவிலும் அன்னை பூபதி இடம் பெற்றிருந்தார்.

எதற்குமே செவி சாய்க்கவில்லை சிங்கள அரசு. இனப்படுகொலைகள் மேலும் அதிகரித்தன. (தொடரும்)

---

### சென்ஜோன்ஸ் — கொக்குவில் இந்து

# கிரிக்கெட் போட்டிகள்

## வெற்றி - தோல்வியின்றி முடிவு

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப்பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி. சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் வெள்ளிக் கிழமை 28ஆம் திகதியும், சனிக்கிழமை 29ஆம் திகதியும், சென். ஜே ன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

கொக்குவில்இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி மொத்தம் 158ஓட்டங்களைப் பெற்றதுஇதில்எஸ்கிருபாகரன் 48ஓட்டங்களையும்எஸ்.கருணகுமார் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் 309 ஓட்டங்களை 9 விக்கட் நஷ்டத்திற்கு பெற்றது. சென்ஜோன்ஸ்கல்லூரி அணித் தலைவர் மகாலிங்கம் காண்டீபன் ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களைப் பெற்றார்.

செல்வன் காண்டீபன் இதற்கு முன் கனகரெத்தினம் மகாவித்தியாலயத்திற்கெதிரான போட்டியிலும் ஆட்டம் இழக்காமல் 105 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. என். சுஜித்குமாரும் மிகவும் சிறப்பாக விளையாடி 57 ஓட்டங்களைப் பெற்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் செல்வன் ஜதீசன் 4 விக்கெட்டுக்களையும், செல்வன் கண்ணன் 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

கொக்குவில் இந்துக்கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் 104 ஓட்டங்களை 7 விக்கட் நஷ்டத்திற்கு பெற்றது. இதில் செல்வன் கண்ணன் 25 ஓட்டங்களைப் பெற்றார், செல்வன் பி. சஞ்ஜீவ் சென் ஜோன்ஸ் கல்லூரி சார்பில் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். (42)

---

# நல்லை ஆதீனத்தில் இசை விழா

'மிருதங்க இசை தெய்வீகமானது. இக்கலையை நீண்ட காலமாக வளர்த்து வரும் திருநெல்வேலி நந்தி இசை மன்றத்தின் சேவை உன்னதமானது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம் பெற்ற நந்தி இசைமன்ற இசை விழாவில்ஆசியுரைவழங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் இவ்வாறு குறிப்பிட்டார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் பேசுகையில் 'பண்டிதமணியின் ஆசியுடன் 1969இல் ஆரம்பிக்கப்பட்ட நந்தி இசை மன்றம் அத்துறையில் பலரை உருவாக்கியதுடன் வெள்ளி விழாவும் காணவுள்ளது' என்றார்.

---

# ரஞ்சன் நினைவாக அரசியல் கல்வி நிறுவனம்

## - பிரேமதாசா அறிவிப்பு

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜெனரல் ரஞ்சன் விஜேயரத்தனாவின் பெயரில் அரசியல் கல்வி நிறுவனம் ஒன்று விரைவில் திறக்கப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சிறீகோத்தாவில் நடைபெற்ற ரஞ்சனின் ஓராண்டு நிறைவு வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், ரஞ்சனின் உன்னத கோட்பாடுகளைப் பரப்புவதற்காக இக்கல்வி நிறுவனம் செயற்படும் என்று அறிவித்தார்.

---

### இலங்கை தொழிலாளர் தொகை

# 2016 ஆம் ஆண்டளவில் ஒருகோடியே பத்துலட்சம்

(கொழும்பு)

2016ஆம்ஆண்டளவில்இலங்கையிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒருகோடியே பத்து லட்சம் ஆகிவிடும் என்று தொழிற்திணைக்களம் அறிவித்துள்ளது.

தொழிற் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் தற்போதுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை எழுபதினாயிரமாகும். இது 2001 ஆம் ஆண்டளவில் எழுபத்தியேழு இலட்சத்து எண்பதினாயிரமாகிவிடும் என்றும், 2016 ஆம் ஆண்டில் ஒருகோடியே பத்து லட்சமாக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிந்தனைக்கு

உன் இன்பமோ, துன்பமோ, பெரிதாகப் பெரிதாக உன் கண்களுக்கு உலகம் குறுகிச் சுருங்கித் தோன்றுகிறது.

-கலீல் சிப்ரான்-

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 04-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05

## தார்மீகக் கடமை

"ஐரோப்பிய நாடுகளல்லாத வேறு எங்கு உள்நாட்டுப் பிரச்சினை காணப்பட்டாலும் அதைத் தீர்ப்பதில் உலகநாடுகள் அக்கறை செலுத்துவதில்லை. அதிலும், மூன்றாம் உலகநாடொன்றில் சிவில் யுத்தம் நடைபெறுகின்றதெனில் அந்த நாட்டினால் தமக்கு ஏதும் பலன் இல்லை எனத் தெரிந்து கொண்டால் அப்பிரச்சினையில் தலையிடுவதை மேற்குலகம் தவிர்த்து வருகின்றது" என கடந்த மாதம் 15ஆம் திகதி லண்டனில் நடைபெற்ற இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக "நியாயமான தீர்வை நோக்கி" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அகதிகள் அமைப்பின் பிரதிநிதி தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடு ஒன்றில் ஏற்படும் நெருக்கடியை ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் தமக்கு ஏற்படும் நெருக்கடியாகவே கருதுகின்றன, ஐரோப்பாவின் பாதுகாப்பு, ஸ்திரத் தன்மை, பொருளாதாரம் என்ற நோக்கில் நாடுகளின் எல்லைகளைக் கடந்ததாக அவர்களின் அணுகுமுறை இருக்கின்றது. எடுத்துக்காட்டாக யூக்கோசெலவோக்கியாவில் உள்நாட்டுப்போர் ஆரம்பிக்கும் முன்னரே ஐரோப்பிய சமூகம் யூக்கோசெலவோக்கியா நெருக்கடி பற்றிப் பேசத் தொடங்கிவிட்டது. உள்நாட்டுப் போர் ஆரம்பித்தவுடனேயே உடனடி யுத்த நிறுத்தம் கொண்டு வரப்பட வேண்டும் எனவும், பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் வற்புறுத்தின. ஐரோப்பிய உயர்மட்ட தூதுக்குழுக்கள் செர்யாவிற்கும், குரோசியாவிற்கும் சென்று பேச்சுக்களை நடத்தின. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் முயற்சியால் கொண்டு வரப்பட்ட பதினான்கிற்கும் மேற்பட்ட யுத்த நிறுத்தங்கள் தோல்வியில் முடிவடைந்த போதிலும் அவை சளைக்காமல் முயற்சிகளில் ஈடுபட்டன. தற்பொழுது அதன் இறுதிக்கட்டமாக யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க ஐக்கியநாடுகள்; அமைதிப்படை யூக்கோசெலவோக்கியாவிற்குஅனுப்பிவைக்கப்படவுள்ளது.

ஆனால், மூன்றாம் உலக நாடுகளில் பல தசாப்தங்களாக எத்தனையோ உள்நாட்டுப் போர்கள் பெரும் இரத்தக்களரியின் மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவ்விவகாரங்களுக்கு மேற்குலகம் தீர்வு காண்பதற்குரிய முயற்சிகளைப் பெரியளவில் எடுக்கவில்லை. அதிலும் கேந்திர முக்கியத்துவம் அற்ற நாடுகளில் நடைபெறும் உள்நாட்டுப் போரைப்பற்றியோ, அங்கு மக்கள் இரத்தம் சிந்துவதையோ, ஒடுக்கப்படுவதையோ மேற்குலகம் கண்டு கொள்வதில்லை.

ஆனால், மேலே கூறியவற்றைக் கொண்டு ஒரு மூன்றாம் உலகநாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் மேற்குலகம் நேரடியாகத் தலையிட வேண்டும், தீர்த்து வைக்க வேண்டும் என அர்த்தம் கொள்ளலாகாது. ஆனால். ஒரு நாட்டிற்குள் நிகழும் போர் ஓர் உள்நாட்டு விவகாரம் என்ற நிலையைக் கடந்து சர்வதேச விவகாரம் ஆகும் போது அதில் மேற்குலகம் தனது பங்கை ஆற்ற வேண்டிய கடப்பாடு உள்ளது என்பதே இங்கு சுட்டிக் காட்டப்படுவதாகும்.

மூன்றாம் உலகநாடுகளில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் சகல உள்நாட்டுப் போர்களிலும், அரசியல் நெருக்கடிகளிலும், மேற்குலகத்திற்குப் பெரும் பங்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. எடுத்துக்காட்டாக இந்தியாவிலும் இலங்கையிலும் நடக்கும் தேசிய இனங்களின் போராட்டங்களுக்கு பிரித்தானிய ஏகாதிபத்தியமே வித்திட்டது. அதேவேளை, ஆப்கானிஸ்தானத்திலும், கம்போடியாவிலும் நடக்கும் போராட்டங்களுக்கும் மேற்குலகமே காரணமாகியது. இதேபோன்று மூன்றாம் உலக நாடுகளில் நடைபெறும் அரசுக்கெதிரான போராட்டங்களுக்கும் உலக சந்தைப் பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் மேற்கு நாடுகளே காரணமாகும்:

இந்நிலையில், மூன்றாம் உலகநாடுகளில் நடைபெறும் உள்நாட்டுப் போர்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என மேற்குலகம் கூறிவிட முடியாது மூன்றாம் உலக நாடுகளில், சிறுபான்மை இனங்கள் இரத்தம் சிந்துவதற்கும், அடக்கு முறைக்கு உள்ளாவதற்கும் மேற்கு நாடுகள் தமது இலாபநோக்கில் குடியேற்ற காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணமாகும். ஆகையால், மூன்றாம் உலக நாடுகளின் பிரச்சினையில் குறிப்பாகத் தேசிய இனப் பிரச்சினையில் தேசிய சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளைத் கவனம் செலுத்த வேண்டியது மேற்குலகின் தார்மீகக் கடமையாகும்.

# பிரேமாவுக்கு அனுகூலமாக ஜே. வி. பி. க்கு அங்கீகாரம்!

ஜே.வி. பியைமீண்டும்அங்கீகரித்து அதனை வெளியரங்கமாக அரசியலிற் செயல்பட செய்ய பிரேமதாசா அரசாங்கம் விரும்புவதாகச் செய்திகள்வெளியாகியுள்ளன. இவ்வாறு ஜே வி பி யைச்செயற்பட விடுவது பிரேமதாசா அரசாங்கத்திற்கு அனுகூலமானது என்பதனாலேயே இம்முடிவை பிரேமதாசா எடுத்துள்ளார்.

1988-89 கால கட்டத்தில் சுமாராக ஐம்பதினாயிரம் இளைஞர்வரை ஜே. வி. பியின் பெயராற் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட ஒவ்வொரு இளைஞனுக்கும் பின்னால் குறைந்தது பத்து வாக்காளர் ஆவது இருப்பர். எனவே அரசுக்கு எதிராக குறைந்தது ஐந்து லட்சம் வாக்காளர் அணிதிரள்வர். இவற்றைவிடவும் விரக்தியடைந்த இளைஞர்களதும் ஜே.வி. பி. ஆதரவாளர்களினதும் வாக்குகள் வேறு. இவ்வாறான ஜே.வி.பி, யை வெளிபரங்கத்திற் செயற்பட விடாது தடுத்தால் இந்த வாக்குகள் பிரேமாவிற்கு எதிரணியான லலித்-காமினி தலைமையிலான ஐ. தே. மு யுக்கோ அல்லது சு. க. யுக்கோ கிடைக்கக் கூடும் இதனால் எதிரணி பலப்பட்டு விடும்:

இந்த நிலையில் ஜே. வி.பி. யை அங்கீகரித்து வெளியரங்கமாகச் செயற்பட விடுவதன் மூலம் மட்டுமே இந்த வாக்குகளைப் பல கூறாகப் பிரிக்க முடியும். ஜே.வி.பி.யை வெளியரங்கமாகச் செயற்படவிட்டால் ஜே. வி. பி. ஆதரவாளர்களின் வாக்குகள் ஜே. வி. பி க்கே கிடைக்கும். ஜே. வி பி. தனித்துப் பெறும் வாக்குகளை கொண்டு நாடாளுமன்றத்திலோ அன்றி ஜனாதிபதித் தேர்தலிலோ ஆதிக்கத்தை அதனாற் பெற முடியாது ஆகலினால் ஜே. வி. பி.யை அங்கீகரிப்பது என்பது எதிரிகளைப் பலவீனப்

### சாரணன்

படுத்துவதற்கான ஓர் உபாயம் மட்டுமே. வர இருக்கும் ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் மையமாகக் கொண்டே ஜே. வி. பி. யை அங்கீகரிக்கும் படலம் ஆரம்பமாகியுள்ளது எனலாம்.

இது ஒன்றும் இலங்கை அரசியலுக்குப் புதியதல்ல. ஜே. ஆரிடம் இருந்து பிரேமா பெற்ற ஓர் அனுபவப் பரிமாற்றமே இது. 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும், 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் ஜே வி. பி.யை தனக்குச் சாதகமான முறையில் ஜே.ஆர். கையாண்டார். தான் தேர்தலில் வெற்றி பெற்றால் சிறையிலுள்ள றோகண விஜயவீர உட்பட அனைத்து ஜே. வி. பி. உறுப்பினர்களையும் விடுதலை செய்வேன் என ஜே. ஆர் 1977 பொதுத்தேர்தலில் பிரச்சாரம் செய்தார்.

இதனால் கொல்லப்பட்ட ஜே.வி.பி.யினரின் ஆதரவாளர்களும், சிறையிலிருந்த ஜே.வி.பியினரின் ஆதரவாளர்களும் 1977 பொதுத்தேர்தலில் ஐ.தே. க. வுக்கு வாக்களித்தனர். இதன்மூலம் ஜே.வி.பி. வாக்கு ஐ தே க. வுக்கு கிடைத்தது.

ஜே ஆர். பதவிக்கு வந்ததும் ஜே.வி.பி. யினரை விடுதலை செய்து அரசியலில் வெளிபரங்கமாகச் செயற்பட அனுமதித்ததும் அவர்கள் சு.க. வின் வாக்குகள் 1982 ஆம் ஆண்டுத் தேர்தலிற் பெரிதும் பாதித்தனர் இதன்மூலமும் ஜே.ஆர். நன்மை அடைந்தார். எனவே ஜே.வி.பி. யினரைச் சரிவரக் கையாண்டதன் மூலம் ஜே.ஆர். தனது வெற்றி வாய்பபுக்களை அதிகரித்துக் கொண்டார். அதேபோலவே பிரேமதாசாவும் ஜே.வி. பீ'யை தனக்கு சாதகமேற்படக்கூடிய வகையில் கையாளும் ஒரு நடவடிக்கையே ஜே வி.பி.யை அரசியல் அரங்கில் வெளிப்படையாகச் செயற்பட அங்கீகரிப்பதன் உள்நோக்கமாகும்.

## தோட்டங்கள் தனியார் மயம் தொழிலாளருக்கு நன்மை -ஏ. எம். டி. இராஜன்

(அட்டன்)

தோட்டங்கள் காலனித்துவ முதலாளிகளின் கையில் இருந்த போதும் சரி, தனிப்பட்ட சொந்தக்காரர்களின் கையில் இருந்த போதும்சரி, அல்லது அரசாங்கம் சுவீகரித்து நிர்வகித்த போதும் சரி, தொழிலாளர்களின் அடிப்படை நிலையில் மாற்றம் எதுவுமில்லை. எனவே தான் தனியார் கம்பனிகள் பொறுப்பேற்பதன் மூலமாவது தொழிலாளர்களின் வாழ்வு சிறப்பாக அமையும் என நம்புகின்றோம் என இ. தொ. கா. உபதலைவரும், நிர்வாகச் செயலாளருமானஏ. எம். டி. இராஜன் தெரிவித்துள்ளார். தோட்டங்கள் தனியார் மயமாக்கப்படுவது சம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கையொன்றில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

தோட்டங்களை தனியார் கம்பனிகளின் நிர்வாகத்திற்குள் கொண்டு வருவதை எதிர்ப்பவர்கள். தொழிலாளர்கள் நன்மையடைவதை எதிர்க்கிறார்கள்என்றே அர்த்தம் கொள்ள வேண்டும்.

தோட்டங்கள் எப்போதும் அரசின் கண்காணிப்பிலேயே இருக்கும் தோட்டத் தொழிலாளர்கள் எடுத்தற்கெல்லாம் நிர்வாகத்தையே நம்பிவாழும் நிலையினால் தான் அவர்களின் வாழ்வு முன்னேற்றமடையவில்லை இதன் காரணமாகவே நாம் தொழிலும், தொழில் சம்பந்தப்பட்ட விடயங்களையும் தோட்ட நிர்வாகத்துடன் வைத்துக்கொள்ளவும், மற்றும் தொழிலாளர்களின் கல்வி சுகாதாரம், மேலதிக வருமானம் மற்றும் நிலவுரிமைகள் அனைத்தையும் நாட்டின் ஏனைய மக்களைப் போன்று அனுபவிக்க வகை செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றோம் எனவும் கூறியுள்ளார்.

### திரும்பப் பெற்றார்

மைதானத்தில் தொலைந்து போன இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை உரியவரே மீண்டும் பெற்றுக் கொண்டார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது கடந்த சனியன்று நடைபெற்ற யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியின் போது நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதியைச் சேர்ந்த திருமதி ஜெயா செல்வம் தமது இரண்டு பவுண் தங்கச் சங்கிலியைத் தவற விட்டார். மறுநாள் அவர் மைதானம் முழுவதும் தேடிக் கொண்டிருப்பதை கண்ட சிறுமி ஒருவர் அவரது தங்கச் சங்கிலியை ஒப்படைத்துள்ளார். (21)

## கெற்பலியில் பாடசாலை இன்று திறக்கப்படும்

(நமது நிருபர்)

கெற்பலியில் பாடசாலை ஒன்று இன்று காலை பத்து மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ள இப்பாடசாலையில் தீவகப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கவுள்ளனர்.

இப்பாடசாலைக்குத்தேவையான ஆசிரியர்களை யாழ். கல்வித் திணைக்களம் வழங்கியுள்ளது. ஆண்டு ஒன்று முதல் பதினொன்று வரையான வகுப்புகள் இங்கு நடைபெறவுள்ளன. இபபகுதிகளைச்சூழவுள்ள கிராமங்களில் தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த 580 குடும்பங்கள் ஏற்கனவே குடியமர்த்தப்பட்டுள்ளன.

இப்பாடசாலையைத் தொடர்ந்து நிர்வகிக்கும் பொறுப்பை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்றுள்ளது. இப்பாடசாலைத் திறப்புவிழா நிகழ்ச்சியில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மற்றும் அரசசார்பற்றநிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். [ச]

## அகதிகளுக்கு உலர் உணவு கொடுப்பனவில் உயர்வு

(கொழும்பு)

அகதிகளாக உள்ள ஒவ்வொரு குடும்பத்தவருக்கும் வாராந்தம் கொடுக்கப்படும் உலர் உணவுப் பொருள்களின் பெறுமானம் இருநூற்று எழுபது ரூபாவிலிருந்து முந்நூற்றுப் பதினைந்து ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

புனரமைப்பு புனர்வாழ்வு, சமூகநல அமைச்சில் அமைச்சர் பீ. தயாரட்ணா தலைமையில் இடம்பெற்ற மாநாடொன்றில் எழுப்பப்பட்ட கோரிக்கையொன்றைத் தொடர்ந்து இந்த அதிகரிப்பு வழங்கப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

## "புறப்பட்டு வாருங்கள்"

கடற்புலிகள் மகளிர் முன்னணி சர்வதேச மகளிர் தினத்தையொட்டி "புறப்பட்டு வாருங்கள்" என்னும் தெருக்கூத்து நிகழ்ச்சியை தயாரித்து பல பகுதிகளிலும் நிகழ்த்தி வருகின்றது.

நேற்று மாலை 4 மணிக்கு குருநகர், தண்ணீர் தாங்கிக்கு அருகான மயில் நிகழ்த்தப்பட்ட மேற்படி தெருக்கூத்து நிகழ்ச்சியைப் பெருந்தொகையான மக்கள் பார்த்துச் சென்றனர்.

## கருத்துரை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பணிமனையில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் அவர்கள் "எனது ஆசிரிய அதிபர் அனுபவம்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

## உலக மகளிர்

நாதன் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி, 2 ஆம் இடம்; செல்வி சுகி சுப்பிரமணியம் - 32/14, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், 3 ஆம் இடம்; செல்வன் மைக்கேல்- விடத்தல்தீவு, மன்னார்.

ஆறுதல் பரிசுகள் . கா. வ. செல்வரட்ணம் - மாதகல் கிழக்கு, மாதகல், சுபோதினி சந்திரசேகரம் - கன்னியர்மடம், ஆங்கிலப் பாடசாலை, சிசிவதர்சினி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஆண்டு 12, வர்த்தகம்

மத்தியபிரிவு- 1ஆம் இடம்; செல்வன் ராகுலன் - 10 ஆம் வகுப்பு, நெல்லியடி ம. ம. வித்தியாலயம், 2ஆம் இடம்; செல்வி வசந்தி நடராசா-9ஆம் வகுப்பு ஏ, மாரீசங்கூடல், இளவாலை, 3 ஆம் இடம்; செல்வன் ப. சசிவர்ணன் - நெல்லியடி ம. ம. வித்தியாலயம், கரவெட்டி.

ஆறுதல் பரிசு- செல்வன் பொ. அலன்மிலர் ஜேம்ஸ்- 10 ஆம் வகுப்பு ஏ, யா/கனகரட்ணம் ம. ம. வித்தியாலயம், செல்வன் சுதாகர் - நெல்லியடி ம. ம. வித்தியாலயம், கரவெட்டி, செல்வி சுவேந்தினி சோமசுந்தரம்- 10 ஆம்வகுப்பு ச்ாவகச்சேரி இந்துக்கல்லூரி, செல்வன் அகிலன் -நெல்லியடி ம. ம. வித்தியாலயம், 9 ஆம் வகுப்பு, கரவெட்டி. செல்வி ச. ஜனாளினி- 10ஆம்வகுப்பு, யாழ். இந்து மகளிர் கல்லூரி, செல்வி சுசிராகுமாரி அம்பலவாணர்- திருக்குடும்பக் கன்னியர்மடம், ஆங்கிலப் பாடசாலை, செல்வி ஊர்மிலா பிரான்சிஸ் - திருக் குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம் செல்வி இ. ருஷ்மிலா புஸ்பம் [10 ஆம் வகுப்பு]

கீழ்ப்பிரிவு 1 ஆம் இடம்; செல்வி சி. தாட்சாயினி - வகுப்பு 9டி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம்; செல்வன் ப. சுதாகரன்- 6ஆம் வகுப்பு டி, கொக்குவில் இந்துக் கல்லூரி, 3ஆம்இடம்; செல்வி சி. சிவபாரதி - இந்து மகளிர் கல்லூரி.

ஆறுதல் பரிசுகள் செல்வன் செ. ராஜ்வரதன் - பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில், செல்வன் சி. சுதாகர்- 6 ஆம் வகுப்பு சி, கொக்குவில் இந்துக்கல்லூரி, செல்வி ப. சகிலா- யாழ். இந்து மகளிர்கல்லூரி, செல்வி தி. தாட்சாயினி- யாழ். இந்து மகளிர் கல்லூரி, செல்வன் ந. முரளீதரன் -கொக்குவில் இந்துக்கல்லூரி, செல்வன் ச. ஜெயராம்.

## ஏப்ரல்

ஞாயிற்றுக்கிழமை இங்குஇடம் பெறாத புலமைப் பரிசில்பரீட்சையை விசேட பரீட்சையாக நடாத்துவதற்கான ஒழுங்குகளை தான் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# புலிகளில் இருந்து தமிழரைப் பிரித்துவிட முடியாது

## பி.பி.ஸி. செய்தியாளரின் கணிப்பு

வடபகுதி மக்கள்விடுதலைப் புலிகளின்பால் ஈர்க்கப் பட்டுள்ளார்கள்என்பதில் இரண்டு பேச்சிற்கு இடமில்லை. இம்மக்களை சிறிலங்கா அரசு தரப்பு தன்வசப் படுத்த முடியுமா என்பது ஐயத்திற்குரியது என பி.பி.ஸி.யின்கொழும்பும் செய்தியாளர் கிறிஸ்தோபர் மோறிஸ் தனது செய்தி ஆய்வுரையில் தெரிவித்துள்ளார்.

வடமாகாண இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் டென்சில் கொப்பேகடுவ மக்கள் மனங்களைக் கவர ராணுவம் முயலவேண்டும் எனக் கூறியது குறித்த தனது செய்தி விமர்சனத்திலேயே பி. பி ஸி. செய்தியாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தஐயத்திற்குக் காரணம் வடக்கு - கிழக்கில் சிறிலங்கா இராணுவம் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ளுமாஎன்பதேயாகும். பொதுமக்களைக் கொல்லும் நாசகாரப் படையாகவே இதுவரை சிறிலங்கா இராணுவம் விளங்கி வந்துள்ளமையே இச்சந்தேகத்திற்குக் காரணமாகும்

சிறிலங்கா இராணுவத்தினர் எல்லோருக்கும் பொதுமக்களுடன் அன்பாகப் பழகுமாறு பணிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றிஏனைய தமிழ்ப்போட்டிக் குழுக்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள சிறிலங்கா இராணுவம் மீண்டும் முயற்சித்து வருகின்றது,

ஆனால் சிங்கள இராணுவம் எமக்கு எதிரானவரே என்றும் இன்னமும் சிங்கள ராணுவம் கெடுபிடியில் ஈடுபட்டு வருகிறார்கள்என்பதையும்வவுனியா மாவட்ட தமிழ் மக்கள் அறிவுறுத்திக் கூறியிருக்கிறார்கள் எனவும்கிறிஸ்தோபர்மோறிஸ் தனது விமர்சனத்தில் தெரிவித்துள்ளார்.

## தவக்காலம் ஆரம்பம்

(குருநகர்)

இன்று (4-3-92) தவக்காலம் ஆரம்பமாவதாக அறிவிக்கப் படுகிறது.

யேசுக் கிறிஸ்து மரணிக்கும் பெரிய வெள்ளிக்கிழமை எதிர்வரும் ஏப்ரல் 17 ஆம் திகதி வருகிறது

அதற்கு முன்பாக கிறிஸ்து நாதரின் பாடுகளை நினைவு கூருமுகமாக இன்று தொடக்கம் 40 நாட்கள் உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்கள் தவக்காலத்தை பக்திசிரத்தையுடன் அனுட்டிப்பரென்பது குறிப்பிடத்தக்கதாகும் (21)

## நியூசிலாந்து வெற்றி

நியூசிலாந்தில் நேற்று நடைபெற்ற உலக கிண்ண கிரிக்கட் போட்டியில் நியூசிலாந்து, சிம்பாவேயை 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

50 ஓவர்கள் இடம்பெற வேண்டிய ஆட்டங்கள் மழை காரணமாக ஒவ்வொரு அணியினரும் இருபது ஓவர்களுடன் ஆட்டத்தினை நிறுத்தவேண்டி ஏற்பட்டது.

### விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினரின்

## உலக மகளிர் தின ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பெண்கள் நிலையினை உணர்த்திடும் ஓவியக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் ஆறாம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உலகப் பெண்கள் நாளை முன்னிட்டு நடாத்தப்படவுள்ள இக்கண்காட்சி விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சி ஆறாம் திகதி முதல் எட்டாம் திகதி வரை தினமும் காலை 9.30மணி முதல் மாலைவரை நடைபெறும்.

## மிதிவெடி விளையாட்டு; சிறுவன் காலை இழந்தான்

(வற்றாப்பளை)

மிதிவெடியைப் பரீட்சித்த பின் காலால்மிதித்துப்பார்த்த சிறுவன் ஒருவர் தனது காலை இழந்த சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் வற்றாப்பளைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது முல்லைத்தீவு இராணுவத்தினரால் நந்திக் கடற்கரைப்பகுதியில்புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடிஒன்று நீரால் அள்ளப்பட்டு முள்ளியவளைக் கரையை அடைந்தது. இதனைக் கண்டெடுத்த முருகுப்பிள்ளை குகநேசன் [வயது 13] என்ற சிறுவனும், அவரது சகோதரனும் இதனை எடுத்து கழற்றிப் பரீட்சித்துள்ளனர். பின்னர் மேற்படி சிறுவன் இதை வீட்டு முற்றத்தில் வைத்துவிட்டு தனது இடது காலால் மிதித்தபோது அது வெடித்தது. இதனால் படுகாயமடைந்த நிலையில் நேற்றுக்காலை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இச்சிறுவனின் இடதுகணுக்கால் அகற்றப்பட்டது. [ச]

### அன்னை பூபதி:

## பொது அறிவு தேர்வில் 30,000 மாணவர்தோற்றுவர்

[அலுவலக நிருபர்]

விடுதலைப்புலிகள்மாணவர் இயக்கம் அன்னைபூபதி நினைவாக வடதமிழீழத்தில் நடாத்தவுள்ள பொது அறிவுத் தேர்விற்கு முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

எதிர்வரும் பதினைந்தாம் திகதி நடைபெறவுள்ள மேற்படி தேர்விற்கு ஆண்டு ஏழில் 5915மாணவர்களும்ஆண்டுஎட்டில்5765மாணவர்களும்ஆண்டு ஒன்பதில் 5350மாணவர்களும் ஆண்டு பத்தில் 4791 மாணவர்களும் ஆண்டு பதினொன்றில் 5958 மாணவர்களும் ஆண்டு பன்னிரெண்டு பதின்மூன்றில் 2922 மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

இதில் மன்னார் மாவட்டத்தில் 1969 மாணவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3577 மாணவர்களும் வவுனியா மாவட்டத்தில் 1864மாணவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1522 மாணவர்களும் மணலாறு மாவட்டத்தில் 245 மாணவர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 21,524 மாணவர்களும் தோற்றுகின்றனர் என மாணவர் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

### யாழ். தொழில் நுட்பக் கல்லூரி

## மாணவர்அவைக்கு எதிராய் அதிபர் செயற்படுகிறாராம்

(நமது நிருபர்)

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்படாதுள்ள பரீட்சைகளை உடனடியாக நடாத்தக்கோரி அரசாங்கத்திற்கு எதிராக நடாத்தப்படும் எமது போராட்டத்தை கல்லூரி அதிபர் தனக்கெதிரானதாகக் கொண்டு மாணவரவைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் என்று தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவை வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரசுரத்தில் கடந்த 1989, 1990, 1991 ஆகிய காலப் பகுதிகளில் பரீட்சை நடத்தப் படாததினால் 2131 மாணவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். இம்மாணவர்களின் நலன்கருதி நடத்தப்படாத பரீட்சைகளை விசேடபரீட்சையாக நடத்தப்படல் வேண்டும் என்பது உட்பட பதினேழு அம்சக் கோரிக்கைகளை அரச அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கு மகஜர் மூலம் சமர்ப்பிக்க முற்பட்டபோது அதிபரின் விருப்பமின்மையால் அது தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர் அவை ஆரம்பிக்கப்பட்ட மிகக் குறுகிய காலப்பகுதியில் அது நிறைவேற்றிய பல செயல் திட்டங்களைப் பற்றியும் இத்துண்டுப்பிரசுரத்தில் விளக்கப்பட்டுள்ளது. மாணவர் அவையின் உண்மை நிலை என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இப் பிரசுரத்தில் மாணவரவையின் கடந்தகால செயற்பாடுகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

## கல்வி முகாமைத்துவ பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கல்வி முகாமைத்துவ அபிவிருத்தி ஊடாக கற்றல், கற்பித்தல் தரத்தை விருத்தியாக்க கல்வி முகாமைத்துவ நிலையத்தில் இவ்வருட விசேட செயற்திட்டமாக அதன் ஆரம்பப்பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர் வரும் சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் யாழ். பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேற்படி பயிற்சி நெறியில் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், கொத்தணி அதிபர்கள், அதிபர்களுடன் கல்வியில் ஆர்வமுள்ளவர்களையும் கலந்து கொள்ளுமாறு பிராந்திய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச)

## காணி உறுதி எழுதத் தடை

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்திலுள்ள மூன்று பிரசித்த நொத்தாரிசுமார் காணி உறுதிகள் எழுதவும் பதிவு செய்யவும் பதிவாளர்நாயகத்தினால் தடை செய்யப்பட்டுள்ளனர்.

இம் மூவரும் தொடர்ந்து உறுதிகளுக்குரிய முத்திரைக் கட்டணங்களைச் செலுத்தாமலும், இரண்டாவது உறுதிப் பிரதிகளைச் சமர்ப்பிக்காமலும் காணிப் பதிவுக் கந்தோர்களை ஏமாற்றி வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முத்திரைக் கட்டணம் செலுத்தாது உறுதிகளைப்பதிவுக்காகச் சமர்ப்பித்த சில சட்டத்தரணிகளும் அண்மையில் எச்சரிக்கப்பட்டிருந்தனர். (24)

## எனது காலத்தில் முஸ்லிம் அகதிகள் இல்லை -லலித்

(புத்தளம்)

இன்று நாடு முழுவதும் பத்துலட்சத்துக்கும் அதிகமான அகதிகள் இருக்கிறார்கள் ஆனால் நான் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தில் வடக்கு-கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் அகதிகளாக இருந்தது இல்லை என்று அண்மையில் புத்தளத்தில் திரு. லலித் அத்துலத்முதலி குறிப்பிட்டார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கிளையொன்று புத்தளம் நகரில் திறந்து வைத்த பின் புத்தளம் பள்ளி வாசலில் நடந்த மத வைபவத்திலும் திருவாளர்கள் லலித் அத்துலத் முதலி, காமினிதிசாநாயக்கா, ஜி.எம். பிரேமச்சந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

எமது முன்னணிஆட்சிபீடம் ஏறியதும் அகதி மக்களின் சம்மதத்தைப் பெற்று அவர்களை அவர்கள் தங்கியிருந்த இடத்திலேயே குடியேற்ற ஆவன செய்வோம் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

## கிழக்கில்

விக் கொள்ளக் கூடியதாக எதுவும் சாதிக்க முடியவில்லை.

இந்த போர், சீனாவிடம் இருந்து சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்த படைக்கலங்களை சோதனை செய்து பார்த்துக்கொள்ள மட்டுமே பயன்பட்டது என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் பெரும் போர் என்று வந்து விட்டால் தான் இந்தப்படைக்கலங்களின் உண்மை நிலைமையை தெரிந்து கொள்ள முடியுமெனமேலும் தெரிவித்தது.

## ஆஸ்பத்திரி

ளர்கள் ஆகியோர் மிகுந்த சிரமத்திற்குள்ளாக வேண்டியுள்ளது என நோயாளி ஒருவர் கவலையாகக் கூறினார்.

இவ்வைத்திய சாலையில் போதியளவு சுத்திகரிப்பாளர் இருந்தும் இந்நிலை நீடிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ச

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.